**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 387/2023**
**Dated :29.04.2026**
**Deposition of witness for : P.W.5**

**List of Witness LW7 Examined as PW5 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணகிரி | வயது | : | 60 |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | பொன்னமராவதி |
| கிராமம் | : | காரையூர் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent. Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 ஆம் எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

முதல் விசாரணை

1) நான் தற்போது காரையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.01.2023 ஆம் தேதி, ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று, அங்கு வழக்கு சம்பவத்தில் காயமுற்ற, சிகிச்சையில் இருந்த சொக்கநாதன்பட்டியைச் சேர்ந்த பெருமாள் மகன் தாமோதரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் 4/2023 இல் சட்டப்பிரிவுகள் 294(b), 336, 506(1) IPC -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். (மேற்படி முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

2) பின்னர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 06.01.2023 ஆம் தேதி, மதியம் 03.30 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சிவசாமி மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(**மேற்படி மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.4** மற்றும் பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் தாமோதரன், கலியபெருமாள், திரிசங்கு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள்

கடந்த 11.01.2023 ஆம் தேதி மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.மனு எண் 141/2023 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து, உரிய பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் அவர்களை வழக்கில் கைது செய்யவில்லை.

4) பின்னர் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நீலகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1-க்கான விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். **(**மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ**.**சா**.**ஆ**. 6** மற்றும் அ**.**சா**.**ஆ**. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**

5) பின்னர், இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக 294(b), 336, 506(1) இதச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கின் எதிர் வழக்கான CC 175/2023 வழக்கினை நான் தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில், 4 வது எதிரி சகுந்தலாவை இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது சகோதரர்கள் 3 பேரும் சேர்ந்து அசிங்கமாக திட்டி, மானபங்கம் படுத்தி, கருங்கல்லால் அடித்து, மண்வெட்டியால் வெட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று ஒரு நாள் கால தாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவுசெய்தேன். இவ்வழக்கில் தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் கலியபெருமாள் மற்றும் திரிசங்கு ஆகியோர் அ.சா.1-னிடம் வேலை செய்யும் நபர்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. அவர்கள் அ.சா.1-ன் ஊர்காரர்கள் ஆவார்கள்.

2) வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடம் யாருக்கு சொந்தமானது என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் புகார்தாரர் அவருக்கு சொந்தமானது என்றும் எதிரிகள் அவர்களுக்கு சொந்தமானது என்றும் அவர்களுக்கும் பரிவர்த்தனை செய்து கொண்டதாகவும் சொன்னார்கள். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் எதிரிகளுக்கு சொந்தமான கிரையம் பெற்ற பட்டா இடம் என்றால் அது எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கில் காயமுற்ற நபருக்கு வெளிப்புற, உட்புற காயம் எதுவும் இல்லை என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் வெளிப்புறமாக சிராய்ப்பு காயம் இருந்தது. உட்புற காயமும் இருந்தது. மேற்கண்டவாறு காயங்கள் இருந்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மருத்துவர் ஜெயந்த் என்பவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரர்க்கும் இடையே பிரச்சனைக்குரிய சொத்து சம்மந்தமாக உரிமையியல்

நீதிமன்றத்தில் 30 வருடங்களாக வழக்கு நடந்து வருவதை தெரிந்து கொண்டேனா என்றால் சாட்சிகள் யாரும் சொல்லவில்லை.

3) நான் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.29 16:43:27 +0530

நா.சிவழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.